அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை கடிதங்கள் : 02/2025

எனது இல : EST-5/04/PCY/0041
பொது நிருவாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.03.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க சேவையில் சம்பள திருத்தம் 2025- salary2025 மென்பொருள் மூலம் சம்பள மீளமைப்பு கடிதங்களை தயாரித்தல்**

2025 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின்படி, 2025.03.25 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 மூலம் அரசாங்க சேவையில் சம்பள திருத்தத்திற்கு தேவையான வழிகாட்டல்கள் செய்யப்பட்டுள்ளன. குறுகிய காலத்திற்குள் பாரிய பணியாட்தொகுதிக்காக சம்பள தயாரிப்பு செயன்முறைக்கு உதவியாக **salary2025** மென்பொருள் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

02. **salary2025** மென்பொருளுக்கு கீழ்வரும்படி பிரவேசிக்க முடியும்.

அ.) **LGN** ஊடாக இணையத்தள வசதிகளை வழங்குவது **10.250.1.112:9006**

ஆ.) வேறு தளங்களின் ஊடாக இணையத்தள வசதிகள் பெற்றுக் கொள்ளப்படின் **43.224.125.68:9006**

03. **salary2025** மேலே 02ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் இணைப்புக்களின் ஊடாக தாபன பிரவேசம் **(Institutional Login)** ஊடாக மென்பொருளுக்கு பிரவேசிக்க முடியும். தாபனத்திற்கு தற்போது MISCO மென்பொருளுக்கு பிரவேசிக்க பெற்றுக் கொடுத்துள்ள கடவுச்சொல்லை **(Password)** இதற்காக பயன்படுத்த வேண்டியதுடன், தமது தாபனத்திற்கு உரிய கடவுச் சொல்லை **(Password)** இற்றைவரையிலும் பெறாதிருப்பின் salary.2025.lk@gmail.com க்கு தாபன தலைவரின் மூலம் மின்னஞ்சல் செய்தியொன்றை அனுப்புவதினூடாக தாபனத்திற்குரிய கடவுச் சொல்லை **(Password)** பெற்றுக் கொள்ள முடியும்.

04. அத்தோடு தமது தாபனத்திற்குரிய தாபன பிரவேசத்தில் குறிப்பிடப்படாதிருப்பின் அதற்காக புதிய பிரவேசமொன்றை **(Institutional Login)** பெற்றுக் கொள்வதற்கு முன்னர் குறிப்பிட்டுள்ள salary.2025.lk@gmail.com மூலம் தாபனத்திற்குரிய பிரவேசத்திற்காக கடவுச்சொல்லை **(Password)** பெற்றுக் கொள்ள முடியும்.

05. **salary2025** மென்பொருளை பயன்படுத்துவது தொடர்பில் உள்ள பிரச்சினைகளை குறைப்பதற்காக, அதனை பயன்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளுக்காக அதன் இடை முகத்திலுள்ள **Help** இணைப்பில் குறிப்பிட்டுள்ள காணொளியினை பார்ப்பதினூடாக அதற்காக பயன்படும் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

06. இவ் மென்பொருளானது தாபன சம்பள மீளமைப்பு செயன்முறையை இலகுவாக்கும் நோக்கத்துடன் மட்டும் அறிமுகப்படுத்தியுள்ளதுடன், உத்தியோகத்தரின் சம்பள மீளமைப்பின் (2025.03.25 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் இணைப்பு 01) சரியாக தனிப்பட்ட ஆவணகோப்புடன் ஒப்பிட்டு அது சரியானதென உறுதிப்படுத்திய பின்பு கையெழுத்திடுவது உரிய அதிகாரிகளின் கடமையென வலியுறுத்துகின்றேன்.

07. இவ் மென்பொருளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட சம்பள மீளமைப்பொன்று உரிய சம்பள சுற்றிக்கையினை பரீட்சிக்கும் போது சரியானதல்லவென அவதானிக்கப்பட்டால் அதற்கான காரணத்தை பரிசோதித்து மென்பொருளில் தேவையான மாற்றங்களை செய்வதற்காக உடனடியாக தொலைபேசி இலக்கம் 011-2693374 ஊடாக அல்லது salary.2025.lk@gmail.com ஊடாக அல்லது தாபன பணிப்பாளர் I ற்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கவென மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


ஒப்பம்./ எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011 2 673 330
தொலைநகல் : 011 2 692 158
மின்னஞ்சல் : ade-v@pubad.gov.lk